RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt224s1631

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ஓமலூர் ஜடை மாரியம்மன் திருக்கோயில் தோற்றமும் வழிபாட்டு முறைகளும்

**மா. ஜெகதாம்பாள் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# Omalur Jatai Mariamman Temple's Origin and Cults

**M. Jagathambal [a, *]**

[a] Department of Tamil, Padmavani Arts & Science College for Women, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: drjagathambal@gmail.com

Received: 15-07-2022
Revised: 06-10-2022
Accepted: 28-10-2022
Published: 15-12-2022

Check for updates

**ABSTRACT**

Jatai Mariamman appears as a powerful deity in people's mind. Jatai Mariamman is worshiped throughout the year and they do festival once in a year. People from different villages comes to the festival and offer prayers to the goddess. When their prayers are fulfilled, they perform alms-punching, pulls a cart with a string on their back, sacrifices goats and hens, offering food and so on. Finally, in evenings and nights, people gather their relatives from different towns and sit together to watch street music concerts and videos.

**Keywords:** Swayambu Shaped Braid Mariamman, Festival, Picking Up, Punching The Unit, Hope.

## முன்னுரை

ஜடை மாரியம்மன் கோவில் சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டத்திலுள்ள செல்லபிள்ளை குட்டை கிராமத்தில் சுயம்புவாக உருவானது. அவை பிற்காலத்தில் அருள்நாதன் என்பவர் ஊரின் மிராசுதாரராக இருந்ததாலும் அம்மன் உள்ள இடம் அவருக்குச் சொந்தமான இடம் என்பதாலும், அவரே தர்மகர்த்தவாக இருந்து கோவில் எழுப்பி வருடாவருடம் பண்டிகை நடத்தியுள்ளார். அவர் இறந்ததும் அவருக்குக் குழந்தை இல்லாததால் கோயிலை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டதாக கூறுகின்றனர். தற்போது பொதுமக்கள் அரசு காவலாளர் துணையுடன் பண்டிகையை எவ்வித இடையூறுமின்றி தனது வேண்டுதலை நிறைவேற்றி வருகின்றனர்.

## அம்மன் கதை வரலாறு

ஜடை மாரியம்மன் சுயம்புவாக உருவானது என்று கூறுகின்றனர். வாய்மொழிக்கதை வழியாக அம்மன் வரலாற்றை அறியமுடிகின்றது. அக்கதை வருமாறு கவுண்டர் ஒருவர் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது அந்த அம்மனை கண்டெடுத்ததாகக் கூறுகின்றனர். தினமும் மாடு மேய்த்துவிட்டு வீட்டிற்குச் சென்று பால் கறந்து வருமானம் ஈட்டுபவர். ஒரு நாள் பசுமாட்டில் பால் இல்லாமல் போகவே கன்று குடித்ததாக நினைத்து கன்றுகுட்டியைப் பிரித்து மேய்த்திருக்கிறார்கள். அப்பொழுதும் மாட்டில் பால் இல்லை, தினமும் இதே போல் நடந்தைக் கண்டதும் மாடு கூடவே சென்று நடந்ததைக் கவனிக்கும் போது ஒரு புற்றின் அருகே சென்று மாடு நிற்க மடியிலிருந்த பால் முழுவதும் சுரந்து கொண்டிருக்கிறது. அன்று கனவில் தான் அங்கே சுயம்புவாக தோன்றியிருக்கிறேன்.

தனக்குதான் உன்வீட்டுப் பசு பாலைத் தருகிறது என்று கூறியிருக்கிறது. உடனே அந்த இடத்தில் கெடப்பாரை கொண்டு தோண்டும்போது கெடப்பாரை பட்டதால் சிலையில் இரத்தம் வந்ததாகக் கூறுகின்றார்கள். அதுமட்டுமல்லாமல் சிலையின் பின்புறத்தில் மூன்று பின்னலில் ஜடை இருந்ததாகவும் எவ்வளவு ஆழம் தோண்டினாலும் சிலையின் ஆழமும் ஜடையின் நீளமும் முடிவடையவேயில்லை என்று கூறுகின்றார்கள். அன்று முதல் பொதுமக்கள் தானியங்களை வீட்டிலேயே மொலப்பாறை முளைக்கவைப்பர். மேலும் தினந்தோறும் கம்பத்திற்கு தண்ணீர் ஊற்றி வழிபடுவார்கள் (Sanmugam, 2022, Age 65, Personal Interview, Salem, India).

## திருவிழா

ஜடை மாரியம்மனுக்கு திருவிழா எடுக்க ஒரு வருடத்திற்கு ஒருமுறை யுகாதி நாளில் ஊரில் உள்ள பெரியவர்கள் ஒன்றுகூடி நாள் குறித்து திங்கட்கிழமை மேளதாளத்துடன் சென்று பெருமாள் கோவிலிருந்து எடுப்பு சிலையையும், ஜடை மாரியம்மன் எடுப்பு சிலையும் கொண்டு வந்து செவ்வாய்க்கிழமை விடியற்காலை வெள்ளைக் குதிரை கொண்டு வந்து அதன் மீது தர்மகர்த்தாவை அமரவைத்து மேளதாளத்துடன் அழைத்துவந்து பூ போட்டு கம்பம் நடுவார்கள். அன்று முதல் 15 நாட்களுக்கு கம்பத்திற்கு அங்குள்ள மக்கள் தண்ணீர் ஊற்றி வணங்குவார்கள். தானியங்களை முளைக்கப்போட்டு 15 வது நாள் முலைப்பாரியைக் கொண்டு வந்து கோவிலின் முன்பு வைத்து வணங்குவார்கள். நல்ல மழைபெய்து விவசாயம் தழைக்க வேண்டுமென இதைச் செய்கின்றார்கள். 13 வது நாள் அம்மனுக்குத் திருக்கல்யாணம் நடத்தப்படும், அதற்கு தேவையான பூ, பழம், மஞ்சள், குங்குமம், தேங்காய், மாலை, பட்டாடை என்று பொதுமக்களும் தர்மகர்த்தாவும் வாங்கி வருவர் பூசாரியும் மாப்பிள்ளை வீட்டாராகவும் தர்மகர்த்தா பெண் வீட்டாராகவும் நின்று தட்டம் மாற்றிக் கொள்வார்கள். பிறகு தர்மகர்த்தா தாலி எடுத்து கொடுத்து பூசாரி தாலி கட்டி விடுவதாகக் கூறுகிறார்கள். திருக்கல்யாணம் முடிந்து எடுப்புசிலையான அம்மனை ஊஞ்சலில் பட்டாடை உடுத்தி நகையணிந்து அமரவைத்துவிடுவார்கள். மொய்ப்பணம் பொதுமக்கள் தருவார்கள். அன்னதானம் சாப்பாடு போடுவார்கள். 14வது நாள் செவ்வாய்கிழமை அனைத்து ஊரில் உள்ள மக்களுக்கும் கூழ் ஊற்றி அம்மனை வழிபடுவர். கூலுக்குப் பதிலாக பாயாசம், மோர் இவற்றையும் இதோடு வெங்காயம் கொத்தமல்லித்தலை இதையும் கலந்து அங்கு வருபவர்களுக்கு அம்மன் முன்பு அண்டாவில் வைத்து டம்பளாரிலோ இல்லை அவரவர்களுக்குத் தகுந்த பாத்திரத்திலோ வாங்கிச் செல்கிறார்கள். 15வது நாள் மாவிளக்கு கரகம், அலகு குத்துதல், பொங்கல் வைத்தல் இவையெல்லாம் முடிந்து, சினிமா பாட்டுக் கச்சேரி, ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம், இரவு நேரங்களில் வீடுயோ அல்லது தெருக்கூத்து அனைவரும் ஓரிடத்தில் அமர்ந்து சந்தோசமான கேலியும் கிண்டலுடன் முடிவடையும் (Maniraj, 2022, Age 40, Personal Interview, Salem, India; Vedavyasakar, 2012; Rakavaccaryar, 2009; Sakthippouyal, 2008; Sakthivel, 1995).

## வழிபடும் மக்கள்

இவ்விழா கலந்து கொள்ளும் ஊர் மக்கள் செல்லபிள்ளைகுட்டை, பாகல்பட்டி, மல்லகவுண்டனூர், தக்காளிகாடு, செந்தேர்காடு. இந்த ஊர்களில் உள்ள மக்கள் நேர்த்திக்கடன் செலுத்தி வழிபட்டு வருகின்றனர் (Palanisamy, 2022, Age 40, Personal Interview, Salem, India).

## நேர்த்திக்கடன்

மக்கள் தங்களுடைய எண்ணங்கள் நிறைவேறும் பொருட்டும் குறைகள் தீரும் பொருட்டும் இறைவனை வேண்டிக் கொள்கின்றனர் (Murugesan, 2003). தம் வேண்டுதல் நிறைவேறினால் குறிப்பிட்ட வகையில் தம் நன்றிக்கடனைச் செலுத்துவதாகவும் வேண்டிக் கொள்கின்றனர். தனிமனித விருப்பத்திற்கேற்ப அடிப்படையில் தனது சக்திக்கு ஏற்ப வேண்டுதலை நிறைவேற்றுகின்றனர். நேர்த்திக்கடன்களாவன

(i). அலகு குத்துதல் அல்லது தால் குத்துதல்

(ii). உடம்பில் வேல் குத்துதல்
(iii). தீச்சட்டி எடுத்தல் அல்லது தீக்கரகம் எடுத்தல்
(iv). பூகரகம் எடுத்தல்
(v). பலி கொடுத்தல்

## அலகு குத்துதல் அல்லது தால் குத்துதல்

அலகு குத்துதல் என்னும் நேர்த்திக்கடன் பெண்கள் நாக்கில் வேல் குத்துவார்கள். ஆண்கள், பெண்கள் இருவரும் வாயலவு, நீளமானதாகவும் அகலம் குறைவானதாகவும் வேல் அடித்து அதில் எலுமிச்சம் குத்தி கொள்வார்கள் (Dhanalakshmi, 2022, Age 65, Personal Interview, Salem, India).

## உடம்பில் வேல் குத்துதல்

உடம்பில் வேல் குத்துதல் என்பது முதுகுபுறத்தில் கம்பியைக் குத்தி ஆட்டோவை இழுத்துச் செல்கிறார்கள். உடம்பில் கம்பியைக் குத்தி உரலைக் கட்டி இழுத்துச் செல்கிறார்கள். இக்கடனைப் பெரியவர்களே செய்கிறார்கள். இவர்கள் கோயிலை 3 முறை சுற்றி வலம் வந்து அம்மனிடம் வேண்டிக் கொள்கிறார்கள்.

## வண்டி இழுத்தல்

அம்மனுக்கு விரதம் இருந்து பக்தியுடன் வழிபட்டு வரும் இம்மக்களில் இளையோர் தங்கள் வேண்டுதலின் பேரில் வண்டியை இழுக்கின்றனர் இதில் ஒருவர் எனத் தனித்தனியாக வண்டி இழுப்பதாக வேண்டிக் கொள்கின்றனர். முதுகில் கொக்கியை மாட்டி கொக்கிப் பகுதியில் மஞ்சள் கயிறு கட்டுகின்றனர். பின்பு அம்மனுக்குப் பூசை செய்து தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வண்டியில் கயிற்றைக் கட்டி இழுக்கின்றனர். அவர்கள் தேர் இழுக்கம் போது அருச்சுனன், தர்மன், திரௌபதி, பீமன், நகுலன் சகாதேவன் என்று தனித்தனியாக வேடம்பூண்டு முகத்தில் கலர்கலராக பூசிக்கொள்கிறார்கள்.

## பூக்கரகம் எடுத்தல்

பூக்கரகம் எடுப்பவர்கள் ஒவ்வொரு ஊராக வீட்டிலிருந்து வரும் போது மேளதாளத்துடன் அம்மனுக்குப் பூசை பொருட்களுடன் முளைப்பாரியும் மாவிளக்கும் செய்ய வேண்டிய பொருட்களுடன் கோயிலுக்கு வருகின்றனர். வந்தபின்பு பொங்கல் வைத்து அம்மனை வணங்கி மண்பானையில் குச்சியைக் கட்டி பூவைச் சுற்றி கோபுரம் போல் அலங்கரித்து, இளையவர்கள் பெரியவர்கள் ஆண்கள், பெண் இருவருமே கோயிலைச் சுற்றி வலம் வந்து கோயிலின் முன்புறம் முளைப்பாரியையும் பூச்சட்டியையும் வைத்து விடுகின்றனர். கரகம் எடுப்பவர்களின் கழுத்தில் உள்ள மாலையில் ரூ.20, ரூ10, ரூ, 50, ரூ 100, ரூ.500 நோட்டுகளைக் குத்துகின்றனர். மாலையைக் கழற்றி கோயிலில் முன்பு உள்ள கம்பத்திலோ, வேலிலோ மாட்டி விடுகின்றனர். பிறகு ஆடு, கோழி பலியிடுகின்றனர் (Maheswari, 2022, Age 53, Personal Interview, Salem, India.).

## தீச்சட்டி எடுத்தல் அல்லது தீக்கரகம் எடுத்தல்

ஊரில் தீச்சட்டி எடுப்பவர்கள் வீட்டிலிருந்து அம்மனுக்குப் பூசை செய்ய வேண்டிய பொருட்களோடு மாவிளக்கும் முளைப்பாரியும் மண்சட்டியும் மாமரத்தில் உள்ள குச்சிகளையும் உடைத்து மேளதாளத்துடன் எடுத்துவருவார்கள். அங்குள்ள நீரில் தீர்த்தம் போட்டு அம்மனை வணங்கி மண்சட்டியில் விறகுகளைப் போட்டு அதற்குள் கற்பூரம் வைத்துப் பற்றவைத்து தலையில் வைத்து கையில் வேப்பிலை ஏந்தி கழுத்தில் மாலையணிந்து மேளதாளத்திற்குத் தகுந்தவாறு ஆட்டம்

ஆடிக்கொண்டும், அசைந்து கொண்டும் சென்று கோயிலை வலம் வருகிறார்கள். அந்த மாலையில் உறவினர்கள் 10, 20, 50, 100, 500 ரூபாய் நோட்டுகளைக் கோர்த்துவிடுவார்கள். மேலும் அந்த சமயத்தில் எவருக்காவது அருள்வந்தால் எலுமிச்சம்பழத்தை வாயில் போட்டு தீர்த்தம் தெளித்தும் நீர் வைத்தும் பூசாரி விடுகிறார்கள். மூன்றுமுறை வலம் வந்ததும் கோயிலின் முன்பு சட்டியை வைத்துவிட்டு, பொங்கல் வைத்து ஆடு கோழியைப் பலியிட்டு நேர்த்திக்கடனை முடித்துவிட்டு வீட்டுக்குச் செல்கிறார்கள்.

## உருளதண்டம்

நேர்த்திக்கடனில் ஒருவகை உருளதண்டம். இதில் ஆண்கள் பெண்கள் இளையவர், பெரியவர் என்று வேறுபாடு இல்லாமல் கோயிலைச் சுற்றிப் படுத்துக் கொண்டே உருண்டு உருண்டு வலம் வருகிறார்கள். பிறகு பொங்கல் வைத்து அன்னதானம் செய்பவர்களும் செய்கிறார்கள்.

## சத்தாவதாரம்

மேற்காணும் நேர்த்திக்கடன்கள் முடிந்தவுடன் அம்மனை வண்டியில் வைத்து ஒவ்வொரு ஊரில் உள்ளோரும் எடுத்துச் சென்று ஊர்பொது இடத்தில் வைத்து ஆடு, கோழி அந்த பகுதியில் உள்ளவர்கள் பலி கொடுக்கிறார்கள். அவ்வாறு எடுத்துச் செல்பவர்களுக்கு வழியிலுள்ள மக்கள் அரிசி, தேங்காய், வெல்லம் கலந்து தருகிறார்கள். மேலும் சுண்டல், வகைவகையான சாப்பாடு போடுகிறார்கள். சாப்பிட்டுவிட்டு அவரவர் வீட்டிற்கும் கொண்டு செல்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் நிர்பானம் என்று வெல்லம், வாழைப்பழம் பேரிச்சம்பழம், கற்கண்டு, தேன், பால், தண்ணீர் அனைத்தும் கலந்து கொடுக்கிறார்கள். இவை வெயிலில் வரும் மக்களுக்கு இதமாகவும், குளுமையாகவும் இருக்கின்றது என்கிறார்கள். திருவிழா முடிந்து ஏழு நாட்கள் அனைத்து ஊருக்கும் சென்று வந்த பிறகு கம்பத்தினை பூஜை செய்து விடியற்காலையில் பிடுங்கிக் கொண்டுபோய் தெப்பக்குளத்தில் போட்டு விடுகிறார்கள். பிறகு செல்லப்பிள்ளை குட்டையில் உள்ள கோவிலுக்குக் கொண்டு செல்கின்றார்கள். அதுவரை இங்குள்ள கோயிலுக்கு வெளியே ஊஞ்சல்கட்டி ஊஞ்சலில் அமர வைத்திருக்கிறார்கள். பெருமாள் சாமியை கொண்டு போய் கோவிலின் கருவறையில் சேர்த்து விடுவார்கள். மீண்டும் அடுத்த வருடம் வரை அந்த சிலை அங்கேதான் இருக்கும் என்று கூறுகின்றார்கள் (Maniraj, 2022, Age 40, Personal Interview, Salem, India).

## எடுப்புசிலை

எடுப்புசிலை என்பது கருவறையில் உள்ள உண்மையான அம்மனைப்போல சிலையை வடித்து பின்புறம் மூன்று பின்னலில் ஜடை வைத்து செய்யப்பட்டிருக்கின்றார்கள். அவை திருவிழா காட்டியதும் மேளதாளத்துடன் சென்று வண்டியில் எடுத்து வைத்து கோவிலுக்கு கொண்டுவருவார்கள், கோவிலின் முன்புறத்தில் அந்த அம்மன் சிலைக்கு ஊஞ்சல் கட்டி அமரவைத்து அதற்குப் பட்டு ஆடை உடுத்தி நகை அணிந்து திருவிழா முடியும் வரை பூஜை செய்வார்கள். மேலும் திருவிழா சாட்டியவுடன் இந்த எடுப்பு சிலையைக் கொண்டு வந்து திருக்கல்யாணம் செய்ததும் ஜடை மாரியம்மன் முகம் சிரிப்பு முகத்தோடு இருக்கம் என்றும், திருவிழா முடிந்து கம்பம் பிடுங்கி விட்டால் அம்மனின் முகம் சுருங்கி கவலையோடு இருப்பதாகவும் கூறுகின்றார்கள். அதற்குக் காரணம் கம்பம் பிடுங்கி விட்டால் பெண்கள் கணவனை இழந்து தனது ஆடை அணிகலன்களை கழற்றி விடுவதற்குச் சமம் என்கின்றார்கள்.

## கோயில் அமைப்பு

செல்லபிள்ளைகுட்டை ஊரின் தொடக்கத்திலேயே வலதுபுறம் கோயில் அமைந்துள்ளது. கோயில் வெளிப்புற மதில், உட்புற மதில் என இருபகுதிகளாக அமைந்துள்ளது. உட்புற மதிலுள் மேற்குப் பகுதியில் நாகம்மாள் ஆலயம் கிழக்குப் புறமாக கிருஷ்ணர் ஆலயம், விநாயகர் ஆலயம்,

முன்புறத்தில் குதிரை வாகனம், பசு வாகனம், கொடி மரமும் அமைந்துள்ளன. கோவிலைச் சுற்றிப் பொங்கல் வைக்கும் இடமும் தண்ணீர் பம்பும் உள்ளது.

## கோயில் நிர்வாகம்

கோயில் நிர்வாகத்தை ஆரம்பக் காலத்தில் ராஜாராம் என்பவர் நிர்வாகம் பார்த்துள்ளார். பிறகு அருள்நாதன் என்பவர் ஊரில் மிராசுதாரராக இருந்துள்ளார். அவர்தான் கோயிலைக் கட்டியுள்ளார். தற்போதும் அவரின் பேரில் தான் கோவில் நிலம் இருக்கிறது. இவரே தர்மகர்த்தாவாகவும் இருந்துள்ளார். அவர் இறந்துவிட்டதால் அரசாங்கத்திடம் கோவிலை ஒப்படைத்துவிட்டனர். விழாக்காலங்களில் அங்குள்ள பொதுமக்கள் பராமரிப்பு பணியைச் செய்து வருகிறார்கள் (Maniraj, 2022, Age 40, Personal Interview, Salem, India).

## வழிபடும் மக்கள்

இவ்விழாவினைக் காண அக்கம்பக்கத்துக் கிராமங்களில் இருந்தும் நகரங்களில் இருக்கும் பல்வேறு பிரிவினர்கள் வருகின்றனர். 12 கிராமங்களில் ஒன்றுகூடி பண்டிகை நடத்தியதாகவும், தற்போது பாகல்பட்டி, பவானூர், குப்பாண்டியூர், கோட்டனம்பட்டி, கருப்பூர், ராமனூர், தோலூர், மல்லகவுண்டனூர், தக்காளிகாடு, முத்துநாயக்கன்பட்டி, செல்லபிள்ளைக்குட்டை மற்றும் பல ஊர்களிலிருந்தும் மக்கள் அம்மனை வழிபட வருகின்றனர். சேலம், தர்மபுரி, நாமக்கல், ஈரோடு என்று பல மாவட்டங்களிலிருந்தும் வந்து வழிபாடு செய்கின்றனர். வருடத்தின் அனைத்து திங்கள், வெள்ளி, அமாவாசை, அம்மனுக்கு உகந்த நாட்களிலும் பூஜை, அபிசேகம் செய்து விடுகின்றனர்.

## நம்பிக்கையும் சடங்கும்

அங்கிருக்கும் மக்களும் வெளியில் இருப்பவர்களும் அம்மனை சக்தி வாய்ந்த கோயிலாக நினைத்து வழிபடுகிறார்கள். அம்மனை முழுமனதுடன் வழிபட்டால் நினைத்த காரியம் நடப்பதாகக் கூறுகிறார்கள். குழந்தை வரம் வேண்டி பெண்கள் விரதமிருந்து அம்மன் இருக்கும் கோவிலைத் தான் கட்டியிருக்கும் புடவை முந்தானையால் வளித்து சுத்தம் செய்வார்கள் அதன் காரணமாக அவர்கள் வேண்டிய பிள்ளைவரம் கிடைத்ததும் அம்மனுக்கு எடைக்கு எடை காணிக்கை செலுத்துவதாகவும் கூறுகின்றனர்.

## முடிவுரை

திருவிழாக்கள் பொதுவாக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படும் ஒன்று. கிராமப்புறம் நகர்ப்புறம், படித்தவர் படிக்காதவர் அனைவரும் தனக்கு எது வந்தாலும் கடவுளிடம் சமர்பிப்பது வழக்கம், அவ்வகையில் ஜடை மாரியம்மன் கோவில் திருவிழாவும் அங்கிருக்கும் மக்களின் நிறை, குறைகளை நிவர்த்தி செய்யும் சக்திவாய்ந்த தெய்வமாக வழிபடுகின்றனர். தனக்கு ஏதாவது கஸ்டம் வந்தாலோ, குழந்தை இல்லையென்றாலோ அம்மனிடம் வேண்டிக்கொள்கிறார்கள். அவரின் வேண்டுதல் நிறைவேறினால் நேர்த்திக்கடனை சந்தோசமாக உறவினர்கள் அனைவரும் ஒன்றுகூடி நிறைவேற்றுகிறார்கள் என்பதை இக்கட்டுரையில் கூறியுள்ளேன்.

## References

Murugesan, K. (2003) Naattuppuravazhipaattu Marapugalum Nambikkaigalum, Mahakavibharathiar Nuulagam, Coimbatore. India.

Rakavaccaryar, S.S. (2009) Aadhi Parasakthi: Maariammangal Varalaru, Narmadha Pathipagam, Chennai, India.

Sakthippouyal, (2008) Mariamman, Shakthi Publication, Pondicherry, India.

Sakthivel, S. (1995) Nattupura Iyal Aaivu, Manivasagar Pathipagam, Chennai, India.

Vedavyasakar, S. (2012) Maariyamman Varalarum Vazhipaadum Bayanum, Shankar Publication, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License